[பு.உ. சண்முகம்] [1975 எப்ரல் 19

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1975) திருப்பி அனுப்பப் படவேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1975) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1974).

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப் பட்ட தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.".
என்று நான் முன்மொழிகிறேன்.

இந்தச் சட்டவரைவை முன்மொழிகையில், கடந்த மூன்றுண்டுகளுக்கு மேல் இந்த அரசு தொழுநோயால் அல்லலுறும் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகளைப்பற்றி இம்மேலவை நன்கு அறியும் என்பதை நான் எடுத்துக்கூற விழைகிறேன். 1971-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா வன்று திரட்டிய நிதிகளிலிருந்து இத்தகைய 10 மறுவாழ்வு இல்லங்களை நிறுவுவதற்காக ஏறத்தாழ 1 கோடி ரூபாய் அளவுக்கு நாம் செல வழித்துள்ளோம் இந்தத் துறையின் மூலம், என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதுபோன்ற இல்லங்கள்:

செங்கற்பட்டு மாவட்டத்தில், பரனூர்

தென்னார்க்காடு மாவட்டத்தில், உளுந்தூர்பேட்டை

@ 274–276ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1975 ஏப்ரல் 19] [திரு. சி. வி. எம். அண்ணாமலை]

தர்மபுரி மாவட்டத்தில், பர்கூர்.

புதுக்கோட்டை மாவட்டத்திலே, புதுக்கோட்டை.

வட ஆற்காடு மாவட்டத்தில், மல்லவாடி.

தஞ்சை மாவட்டத்தில், மீனயேரிப்பட்டி.

மதுரை மாவட்டத்தில், புதுப்பட்டி.

கோவை மாவட்டத்தில், விண்ணப்பள்ளி.

சேலம் மாவட்டத்தில், தேவியாகுறிச்சி

தருமபுரி மாவட்டத்தில், செல்லியம்பட்டி என்பன.

இன்று இவ்வில்லங்கள் அனைத்திலும் சேர்ந்து ஆடவரும் பெண்டிருமாக ஏறத்தாழ மொத்தம் 3,400 பேர் உள்ளனர். இந்த மறுவாழ்வு இல்லங்களில் மருத்துவப் பணியாளர்கள், மருத்துவத் துணைப் பணியாளர்கள் ஏனைய நிர்வாகப் பணியாளர்கள் ஆகியோர் போதிய எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த இல்லங்களில் உறைவோர்களுக்கு மருத்துவச் சிகிச்சையும் அறுவைச் சிகிச்சையும் முழு அளவில் கொடுக்கப்படுவதோடு கூட, இவர்களுக்கு உணவு, உடை, ஆகியவையும் கொடுத்து வருகிறோம். இந்த இல்லங்களுக்காக ஆண்டு தோறும் ஆகும் தொடரினச் செலவு சற்றேறக்குறைய ரூபாய் 40 இலட்சத்துக்கும் மேல் உள்ளது. இந்த இல்லங்களில் உறைவோர் அனைவரும் பெரும்பாலும் தாங்களாகவே இவற்றில் வந்து சேர்ந்துள்ளனர். ஆனால் பிச்சை எடுப்பதையே பெரிதும் விரும்பும் இவர்களில் சிலர் இந்த இல்லங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இந்தப் பிச்சைக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களுக்குத் தண்டனை அளிக்க இதுவரையில் நாம் நீதிமன்றத்துக்குச் செல்லவில்லை. ஆனால், தாங்களாகவே, இந்த இல்லங்களில் வந்து சேராத மிகச் சிறுபான்மையினர் மீது பிச்சை எடுத்தலைத் தடுக்கும் பழைய சட்டம் அளித்துள்ள அதிகாரங்களோடு, இப் புதிய திருத்தச் சட்ட வரைவு நமக்கு அளிக்கக்கூடிய அதிகாரங்களையும் நாம் பயன்படுத்த வேண்டியிருக்கும். இப்போது நான் முன்மொழிகின்ற திருத்தச் சட்ட வரைவின் மிக முக்கிய விதித்துறை என்னவென்றால், தொழு நோயால் அல்லலுறும் பிச்சைக்காரர்களை கால வரம்பின்றி இந்த இல்லங்களில் நிறுத்தி வைத்துக் கொள்வதற்கான அதிகாரங்களை மேற்கொள்ளும் விதித்துறைதான். குற்றவியல் நீதிபதி ஒருவரால் தண்டனை அளிக்கப்பட்ட பின்னரே இவ்வாறு காலவரம்பின்றி அவர் நிறுத்தி வைத்துக்கொள்ளப்படுவார். இவ்வாறு காலவரம்பின்றி நிறுத்தி வைத்துக்கொள்ளப்படுபவர்கள் மிகச் சிலராகவேயிருப்பினும் அரசு அத்தகைய அதிகாரங்களை மேற்கொள்ளுவதனால் ஒரு பக்கம் சமுதாயத்திற்கும், மறுபக்கம் அத்தொழுநோயாளிகளுக்குமே தனது கடமையை நிறைவேற்றும் பொறுப்பினை ஏற்க வேண்டியுள்ளது. அவ்வாறு காலவரம்பின்றி நிறுத்தி வைத்துக்கொள்ளப்படும் ஒருவர் பூரண குணம் அடைந்தவுடனும், மற்றும் அத்தகைய பிச்சைக்காரர்க்கு இடவசதி அளித்தல், உணவு அளித்தல் அவருக்கு மருத்துவச் சிகிச்சை அளித்தல் ஆகியவற்றை பொதுமக்களில் ஒருவரோ அல்லது அப்பிச்சைக்காரரின் ஓர்

உறவினரோ தாமே ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தாலும், அப் பிச்சைக்காரர் நிச்சயமாக இந்த இல்லத்திலிருந்து விடுவிக்கப்படுவார்— என்கிற அளவில் இத்திருத்தச் சட்டவரைவில் இயற்றப்பட்டுள்ள விதத்தை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, தாங்களாகவே இந்த இடங்களில் சேர முன்வராத தொழு நோயப் பிச்சைக்காரர்களின் மீது சற்றுக் கண்டிப்பாகவே நடவடிக்கை எடுத்துக் கொள்ள நாம் கருதினாலும், அதே சமயத்தில் அவர்கள் மீது பரிவு காட்டவும் நாம் தயங்கவில்லை என்பதை இந்த சட்டத்திருத்தம் எடுத்துக்காட்டுகிறது என் பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். ஆகவே, தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் முழுமையான மறுவாழ்வு பெறுகிற வரையில் அவர்களை இச்சிறப்பு இல்லங்களில் கால வரம்பின்றி நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு 1945 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுத்தல் தடுப்புச் சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. மற்றும், தொழுநோயால் பீடிக்கப்பட்டுள்ள சிறுவர்களைப் பொறுத்தவரையில் கூட, அச்சட்டத்தில் இதைப் போன்ற ஒரு விதித்துறையை இயற்றவும் கருதப் பட்டுள்ளது.

மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் அளிப்பதே இச்சட்ட வரைவின் நோக்கமாகும் என்பதை எடுத்துக்கூறி இப்பிரேரணையை இம் மாமன்றம் ஏற்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 48/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

(பிற்பகல் 5·00)

*திரு. கே. ராஜாராம்: துணைத் தலைவரவர்களே, அண்மையில் நமது மாநில பொதுக் கணக்குக் குழு ஆய்வின்போது, இம்மாதிரி நடை பெற்று வருகின்ற பிச்சை எடுப்போர் புனர் வாழ்வு இல்லத்தைப் பார்த் தோம். செங்கற்பட்டுக்கு பக்கத்திலே பரனூரில் இருக்கும் விடுதிகளைப் நாங்கள் போய்ப் பார்த்தோம். அங்கு விசாரித்ததில், சொல்லாமல் கொள்ளாமல் சிலர் சில நாட்கள் ஆனவுடனேயே தப்பி ஓடிப்போய் விடு கிறார்கள் என்று தகவல் சொன்னார்கள். அதற்கு என்ன காரணம் என்பதையும் அரசாங்கம் யோசிக்க வேண்டும். ஏனெனில் அங்கே மருந்துகள் கொடுத்து, கட்டுகள் போடுவதுடன், அவசியமானால் சஸ்திர சிகிச்சைகள் கூட செய்கிறார்கள், மற்றும் எல்லாவிதமான உதவிகளும் செய்கிறார்கள். ஆடை கூட கொடுக்கிறார்கள். நல்ல உணவு போடுகிறார்கள். இவ்வளவு இருந்தும், அவர்கள் என் அதை விட்டுத் தப்பி ஓடுகிறார்கள் என்று தெரியவில்லை. அதைப்பற்றி ஆலோசனை செய்து பார்க்க வேண்டும். அந்த இல்லத்தை விட்டு அவர்கள் ஓடுவதற்கு

1975 ஏப்ரல் 19] [திரு. கே. ராஜாராம்]

அவர்கள் மனதில் எது தூண்டுதலாக இருக்கின்றது ? பிச்சை எடுப்பதைத்தான் முக்கியமாகக் கொண்டு ஓடுகின்றார்கள். ஓடுகின்ற காரணம் வேறு என்ன என்று பார்க்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவர்களுக்கு அதுதான் முக்கியமாகத் தெரிகின்றது. (சிரிப்பு).

திரு. கே. ராஜாராம்: அதைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியிருக்கின்றது. சுற்றிலும் ஒரு டிதில் கட்டி, அதை ஒரு ஜெயில் மாதிரி ஆக்கி வைக்க முடியாது. நல்ல நிலைமையிலே அவர்கள் நடத்தப்படுகிறார்கள். அப்படி இருந்தும், இந்தக் குறைக்கு என்ன காரணம் என்பதைப்பற்றி சைக்கலாஜிகல் எக்ஸ்பர்ட்ஸ் என்று சொல்லுகின்றார்களே, அவர்கள் யோசித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதற்கு என்ன வழி செய்யலாம் ? அவர்கள் வெளியில் ஓடிப்போகாமல் இருப்பதற்கு, அவர்களை தடைப்படுத்துவதற்கு ஒரு வழி கண்டு பிடிக்கப்பட வேண்டும். ஏனென்றால் அவ்வளவு சௌகரியங்கள் அவர்களுக்கு அங்கே செய்யப்படுகின்றன. அப்படி இருந்தும், அவர்கள் தப்பி ஓடுவதற்கு என்ன காரணம் என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும், அதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

தொழு நோய் வந்தவர்கள் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தால் அவர்களைப் பிடித்து மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னால் கொண்டுபோய் கோர்ட்டில் நிறுத்துவது என்பதையும் அரசாங்கம் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். கோர்ட்டிலே கொண்டுபோய் அவர்களை, ஏதோ திருட்டு அல்லது கிரிமினல் குற்றம் செய்தவர்களைப் போன்று, நிறுத்துவது அவசியம்தானா ? அதற்கு வேறு ஏதாவது வழி செய்ய வேண்டும். தொழு நோய்க்காரன் அந்த நோய் காரணமாக பிச்சை எடுத்துக் கொண்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டு பிச்சை எடுக்கின்றான். நாமும் அதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். இதைப் பற்றியும் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். மாஜிஸ்ட்ரேட்டுகளுடைய இல்லங்களிலோ, கலெக்டர் அல்லது டெபுடி கலெக்டர் அவர்கள் வீட்டுக்கோ கொண்டு போய், அவர்கள் பார்த்து உத்தரவு போட்டால் போதாதா என்று பார்க்க வேண்டும். பைத்தியம் பிடித்தவர்களை அப்படித்தான்செய்கிறார்கள். கோர்ட்டுக்குக் கொண்டு போய் நிறுத்துவதில்லை. பைத்தியம் பிடித்தவர்களை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டும் என்ற நிலை இருந்தால், கோர்ட்டுக்குக் கொண்டு போவதைவிட, கலெக்டருடைய இல்லத்திற்குத் தான் கொண்டு போகிறார்கள். அவர்கள் நேராகப் பார்த்து, எண்டார்ஸ் பண்ணி, ஒரு அத்தாட்சி கொடுத்து விடுகிறார்கள். பிறகு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுகிறார்கள். அது மாதிரி இதற்கும் ஏதாவது செய்தால், நல்லதாக இருக்கும். அவர்களைக் கொண்டுபோய்க் கோர்ட்டில் நிறுத்துவது என்ற ஒரு புரவிஷன் இந்த பில்லிலே செய்யப்பட்டிருக்கின்றது. அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்க வேண்டும். அவர்களும் நாம் என்ன திருடினோமா அல்லது என்ன கிரிமினல் குற்றம்

செய்தோமா, பிச்சை எடுப்பது என்ன ஒரு பெரிய குற்றமா, இல்லாமையால் தானே பிச்சை எடுக்கிறேன், என்னை ஏன் இப்படிச் செய்கின்றார்கள் என்று அவர்கள் மனதிலே இயற்கையிலேயே ஒரு எண்ணம் தோன்றும். ஆக அப்படி எல்லாம் இல்லாமல், இந்த புரவிஷனை எடுத்துவிட்டு, அந்த மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குக் கொண்டுபோய் நிறுத்தாமல், வீட்டில் கொண்டு போய் ஒரு அத்தாட்சி அவரிடம் பெற்று, பிறகு இந்த மாதிரி இல்லங்களுக்கு அனுப்புவது என்பது போதாதா என்றெல்லாம் ஆராய்ந்து செய்ய வேண்டும். அரசாங்கம் அம்மாதிரி ஒரு நல்ல முடிவைச் செய்தால் நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்தத் தீர்மானத்தை வரவேற்கின்ற வகையில் கருத்துத் தெரிவித்து ஒரு சிறு திருத்தம் வேண்டும் என்ற அளவில் இங்கே எடுத்துப் பேசியிருக்கின்றார்கள். நாம் இப்போது புதிதாக இப்படிச் சட்டம் கொண்டு வரவில்லை என்பதை நமது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தெருவிலே பிச்சை எடுக்கின்ற நிலை ஏற்பட்டால், ஒரு நீதித் துறைத் தலைவர், நீதிபதி முன், காவல் துறையினர் அப்படிப் பிச்சை எடுப்பவரின் மீது நடவடிக்கை எடுத்து, நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றால், 3. ஆண்டுகளுக்கு மேற்படாமல் சிறைத் தண்டனை வழங்கலாம் என்று இப்போது ஒரு சட்டம் அமுலில் இருந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல, பிச்சை தானே எடுக்கிறார்கள். அவர்கள் மீது இந்தப் பெரிய குற்றத்தை நாம் ஏன் சுமத்தி அவர்களுக்குத் தண்டனை வழங்கி, சிறைக்குக் கொண்டு செல்லவேண்டும் என்பதனாலேயும், அரசு, இப்படி நோயுற்று நோய் காரணமாக நலிந்து, சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற அளவில் இவர்கள் இருக்கின்ற காரணத்தினாலேயும், இவர்களுடைய மனப் புண்ணையும், புறமே தோன்றுகின்ற நோயையும் போக்குவதற்காகவும், அவர்களுடைய நிலைமையை மாற்றுவதற்காகவும் இந்த இல்லங்கள் அவர்களுக்கு உறைவிடமாக இருக்கின்றன. அந்த மறுவாழ்வு இல்லங்களுக்கு அவர்களாகவே வரவேண்டும். அப்படி வருகை தந்து பலன் பெறுவதற்கான இந்தப் புனர் வாழ்வுத் திட்டத்தினை அவர்கள் ஏற்பார்கள் என்ற நம்பிக்கையில் எடுத்துக் கொண்ட முயற்சி இது. இந்தத் திட்டத்தில் பெருமளவுக்கு வெற்றி கிட்டியிருக்கின்றது என்று எடுத்துச் சொல்ல விழைகிறேன். யாரோ ஒரு சிலர் வருகிறார்கள், இடையிலே செல்கிறார்கள் என்றால், அவர்கள் உள்ளே இருக்கின்ற நேரத்திலே வசதி குறைவு காரணமாக செல்லவில்லை என்பதையும் தொல்லைகள் காரணமாக செல்லவில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். கட்டுப்பாடின்றி, கண்டபடி நேரம், காலம் அறியாமல் சுற்றித் திரிந்து கொண்டிருப்பவர்களை முறைப்படுத்தி, நெறிப்படுத்தி ஓரிடத்தில் குடியமர்த்துவது போல அமர்த்தி, உரிய காலத்தில் அறுசுவை உணவு கொடுத்து, அவர்களுடைய உடலிலே இருக்கின்ற நோய் நீங்குவதற்காக நல்ல அருமையான மருந்திட்டு, அந்தப் புண்ணை ஆற்றுகின்ற பெரும் பளுவை அரசு ஏற்றுக் கொண்டிருக்கின்றது. என்றாலும்கூட, எப்படி

1975 ஏப்ரல் 19] [திரு. சி. வி. எம். அண்ணாமலை]

ஒரு குழந்தை, அதற்கு இருக்கின்ற நோயைக் குணப்படுத்த தாய் கசப்புள்ள மருந்து தருவதற்கு முற்படுகின்றபோது, வாந்தி எடுக்கிறதோ, மருந்தை ஏற்பதிலிருந்து எப்படித் தப்பி ஓடுகின்றதோ, அந்த மாதிரி அவர்கள் மனநிலையிலே இருக்கின்றார்கள். அவர்கள் வெளியிலே சென்று கட்டுக்கடங்காமல் திரியலாம் என்ற உணர்விலே உந்தப்பட்டு சென்று விடுகிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன். உண்மையாகவே இந்தத் திருத்தம் ஒரு சமுதாய பாதுகாப்பிற்காகவும் அடித்தளத்திலே நோயுற்று இருப்பவர்களுக்கு புனர் வாழ்வு அளிப்பதற்காகவும், கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் இவர்களை வாழ வைக்கவேண்டும் என்று நெறி காக்கின்ற தன்மையிலே, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுடைய 51-வது நாள் பிறந்த நாள் விழாவின்போது, அறிவிக்கப்பட்ட மறுவாழ்வு இல்லம், அங்கே கட்டப்பட்டு, அதைச் செயல்படுத்தி வருகின்ற முறைகளை நிறைவு செய்வதற்காக இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்கள் மீது உள்ள கடுமை காரணமாக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படவில்லை என்பதை நான் வணக்கத்தோடு இங்கே தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன்.

(பிற்பகல் 5-10)

இப்பொழுது இருக்கிற சட்டப்படி, நீதிபதிகள் தீர்ப்பு வழங்குவதில்லை. எவ்வளவு பெரு நோய்க்காரராக இருந்தாலும், 3 ஆண்டு தண்டனை என்று இருந்தாலும்கூட, அவர்களுக்கு 6 திங்கள் அல்லது 9 திங்கள் அல்லது ஓராண்டு என்று தண்டனை கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குமேலாக மருத்துவ சிகிச்சை பெற்று நலன்பெற்று வரவேண்டிய அவர்கள் தண்டனைக் காலம் முடிந்த உடனேயே செல்வது தடுப்பதற்குரிய ஒன்று. அதைத் தடுப்பதற்குரிய அதிகாரம் நம்மிடத்தில் இல்லை. அவர்கள் பூரண நலம் அடைய வேண்டும், நோய் முற்றிலும் முற்றுப் பெற வேண்டும், முழு மனிதனாக அவர்களை வெளியே அனுப்பி வைக்க வேண்டும் என்ற தூய எண்ணத்தினால்தான், இந்தச் சட்ட முன் வடிவை அரசு கொண்டுவந்திருக்கிறது என்பதை நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு எடுத்துக் கூறிக் கொள்ளுகிறேன். சமுதாயத்தின் அடித்தளத்திலே நித்தம் நித்தம் சீழும், சகுதியும், கண்ணீருமாக கசந்து கொண்டு அவர்கள் படுகின்ற துன்பத்தை நம்மைப் போன்ற சமுதாய உணர்வு உள்ளவர்கள் எல்லாம் போக்கி, இந்த நாட்டில் ஏற்பது இகழ்ச்சி என்ற பொன்னான கொள்கைக்கு உரை தேடுகின்ற தன்மைக்கு அவர்களை ஆளாக்கி விடாமல், நாட்டில் அத்துணை பேரும் சோறு கிடைக்கப்பெற்று நிம்மதியான வாழ்வு வாழவேண்டும் என்ற புனிதமான எண்ணத்தால் உந்தப் பெற்று, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று எடுத்துக் கூறி, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. கே. ராஜாராம் : கோர்ட்டுக்குக் கொண்டுபோகாமல் மாஜிஸ்ட்டிரேட்டினுடைய வீட்டிலே வைத்தே இதைப் பண்ணக்கூடாதா? கோர்ட்டிலே போய் நிறுத்த வேண்டுமா?

மாண்புமிகு திரு. ஒ. பி இராமன் : இந்த முறை எற்கெனவே இருப்பதுதான். புதிதாகக் கோர்ட்டுக்குக் கொண்டுபோய் நிறுத்துவதற்கான திருத்தமல்ல இந்தச் சட்டத் திருத்தம். எற்கெனவே கோர்ட்டுக்கு முன்னாலே கொண்டு போகலாமென்று சட்டத்திலே இருக்கிறது. நீண்ட காலம் வைத்துக் கொள்வதற்குத்தான் இந்தச் சட்டத்திலே அதிகாரம் இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லே.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலேவர் : அவை முன் உள்ள பிரச்சினே :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்புச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந் தலேப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலே : தலேவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1974) நிறைவேற்றப்படவேண்டும்". என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலேவர் : அவை முன் உள்ள பிரச்சினே :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.